

மறைமலை நகரில் உள்ள "ஸ்பெல் செமி கண்டக்டர்" நிறுவன விழாவை மத்திய மந்திரி ப.சிதம்பரம் தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தலைவர் நாராயணசுவாமி, ஸ்பிக் தலைவர் ஏ.சி.முத்தையா ஆகியோரும் படத்தில் இருக்கிறார்கள்.

# இந்திய பொருளாதாரத்தில் 8 சதவீத வளர்ச்சி ஏற்படும்

## ப. சிதம்பரம் பேச்சு

சென்னை, செப். 11–

"இந்திய பொருளாதாரத்தில் 8 சதவீத வளர்ச்சி கிடைக்கும்" என்று, மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் கூறினார்.

சென்னையை அடுத்த மறைமலைநகரில், "ஸ்பெல் செமி கண்டக்டர்" நிறுவன விழாவில் கலந்து கொண்ட ப.சிதம்பரம் பேசியதாவது:–

### 8 சதவீத வளர்ச்சி

இந்திய பொருளாதாரத்தில் 8 சதவீத வளர்ச்சிக்காக உழைத்து வருகிறோம். நிச்சயம் 8 சதவீத வளர்ச்சி கிடைக்கும். அதற்கு மேலான சதவீத வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

நிதித்துறையும், இந்திய தொலை தொடர்பு–தகவல் தொழில் நுட்பத்துறையும் இணைந்து செயல்பட்டு வருகிறது. இதில் நல்ல முன்னேற்றம் கிடைத்து வருகிறது.

### பிரதமர் அறிவிப்பார்

பிரதமர் மன்மோகன் சிங் வெளிநாடு சென்று இருக்கிறார். அவர் இந்தியா வந்ததும், கம்ப்யூட்டர் பாகங்கள் உற்பத்திக்காக புதிய சலுகைகள் அறிவிப்பார். வெளிநாட்டில் உற்பத்தியாகும் பாகங்களின் தரத்துக்கு இணையாக இந்தியாவிலும் தயாரிக்கப்பட வேண்டும்.

நமக்கு முதலில் அமெரிக்காவில் இருந்து கம்ப்யூட்டர் மற்றும் அதன் பாகங்கள் உற்பத்தி தொழில் நுட்பம் கிடைத்தது. இப்போது இந்தியாவிலேயே நாம் உற்பத்தி செய்யக்கூடிய தரத்துக்கு முன்னேறி இருக்கிறோம்.

இந்தியாவில் அதிகபட்ச என்ஜினீயர்கள், தகவல் தொழில்நுட்பத்துறைக்கு சென்று விடுகிறார்கள். இப்படியே சென்றால், தொழிற்சாலைகளுக்கும், சுரங்க பணிக்கும் என்ஜினீயர்கள் தேவை அதிகமாகும். எனவே இதிலும் என்ஜினீயர்கள் விருப்பம் தெரிவிக்க வேண்டும்.

### இந்தியர்களின் திறமை

இன்னும் சில ஆண்டுகளில் பரிசோதனை மற்றும் "சிப்" போன்ற முக்கிய பாகங்களை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் முன்னேறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியர்கள் உலக அளவில் முன்னணி நிறுவனங்களில் திறமையாக பணியாற்றுகிறார்கள். எனவே அவர்கள் முதல் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் திரும்பவும் இந்தியா வந்து, இந்தியாவை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

இவ்வாறு ப.சிதம்பரம் பேசினார்.